# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

TAMIL EELAM

000450

யாழ்ப்பாணம்,
20.10.1987.

## இந்திய இனப்படுகொலைகளுக்கெதிராக தர்மப் போர்

அன்பார்ந்த தமிழீழ மக்களே;

இந்திய அரசும்,இலங்கை அரசும் கூட்டாகச் சேர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிராக
திட்டமிட்டு பொய்ப்பிரசாரத்தினை நடாத்தி வருவதனை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.இல
-ங்கை வானொலியும்,அகில இந்திய வானொலியும் அபாண்டமான அருவருக்கத்தக்க பொய்க
ளைக் கட்டவிழ்த்துவிட்டு நமது இயக்கத்தைக் களங்கப்படுத்தவும் பொதுமக்களைக் குழப்பவு
-ம் முயற்சி செய்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகள் அனைத்
தும் இந்திய அமைதிப்படையினரின் நாசகார வேலைகளின் காரணமாக செயலிழந்துள்ளன.
இந்த இக்கட்டான சூழ்நிலையில் எமது மக்களாகிய உங்களுக்கு உண்மை நிலையை எடுத்துக்
கூறுவது எங்கள் கடமை. விடுதலைப்புலிகளை தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து
எம்மைச் சிங்கள அரசு ஏற்குமாறு வற்புறுத்தி வந்த இந்தியா திடீரென எமக்கெதிராக எம்
மை அழிக்கும் நோக்குடன் ஒரு யுத்தத்தை தொடர்ந்திருப்பதன் காரணம் என்ன? இந்திய-புலி
கள் யுத்தத்தின் பின்னணி என்ன? இந்தயுத்தம் இன்று என்ன நிலையில் உள்ளது? இந்த யுத்தத்
தால் ஏற்பட்ட உண்மையான உயிர்ச்சேத விபரங்கள் என்ன? இந்த யுத்தத்தினை இந்தியா
தொடர்ந்தும் நடத்துமா? இந்த யுத்தத்தினால் பாரத நாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் எதி
ரொலிகள் என்ன? சர்வதேச ரீதியாக பாதிப்புக்கள் என்ன? இந்த நெருக்கடியான சூழ்நிலை
யில் தமிழ் மககளாகிய நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இவை பற்றி நாம் உங்களுக்கு விள
-க்கங்கள் அளிக்க விரும்புகின்றோம். எமது அன்பார்ந்த மக்களே! எமது அன்புத் தோழன் திலீ
பன் மரணமும் எமது பிராந்தியத் தளபதிகள் உட்பட பன்னிரண்டு போராளிகளின் அநியாயச் சா
வுகளும் எமக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் கூர்மையான முரண்பாட்டை உருவாக்கின. இந்திய
அரசு காட்டிய அதீததாமதம் திலீபனைப் பலிகொண்டது என்பது யாவரும் அறிந்ததே. ஆனால்
எமது தளபதிகளான மூத்த உறுப்பினர்கள் உயிர் நீத்தது மன்னிக்க முடியாத ஒரு குற்றச்செயல்
என்றே நாம் கருதுகின்றோம். இவை அப்பட்டமான படுகொலைகள். புலிகளின் தலைமைப்பீட
-த்தினை பலவீனப்படுத்த திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதிச்செயல் இதுவாகும். இந்தப்
படுகொலைகளுக்கு ஜெயவர்த்தனா மட்டுமன்றி இந்திய அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்பது
எமது நிலைப்பாடு. இந்த அநியாயமான படுகொலைகள் சம்பந்தப்பட்டமட்டில் ஜெயவர்த்தன
விற்கு இந்திய அரசு துணை போனது. தமிழர் நலன்களையோ,தமிழர் அபிலாசைகளையோ
இந்திய அரசு கருத்தில் கூட எடுத்துக்கொள்ளவில்லை. இந்த எதிர்பாராத சம்பவங்களை அடு

த்து இந்திய அரசு மீது எமக்கிருந்த நம்பிக்கை தகர்ந்தது. இந்திய அரசு எமது மக்களைப் பாதுகாக்குமென நாம் நம்பவில்லை. திருகோணமலைப் பிராந்தியத் தளபதி லெப்டினன் கேணல் புலேந்திரன், மட்டக்களப்பு முன்னாள் பிராந்தியத் தளபதி லெப்டினன் கேணல் குமரப்பா ஆகியோரது அகாலமரணம் கிழக்கிலங்கை மக்களைக் கொதித்தெழ வைத்தது. மக்களின் ஆத்திரமும், ஆவேசமும் கிழக்கிலங்கையில் வன்முறைச்சம்பவங்களை வெடிக்கச் செய்தன. இந்த வன்முறைச்சம்பவங்களில் சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். இதனால் ஜெயவர்த்தன கொதிப்படைந்தார். ஜெயவர்த்தனவைத் திருப்திப்படுத்த ஜெயவர்த்தன ஆட்சிக்கு ஊன்று கொடுப்பதையே இலட்சியமாகக் கொண்டிருந்த இந்திய அரசு எம்மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தது. புலிகளோடு மேற்கொள்ளப்பட்ட யுத்தம் ஜெயவர்த்தனவையும், சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த மேற்கொண்ட அசட்டுத்தனமான நடவடிக்கையேயன்றி வேறொன்றுமல்ல. இந்தியாவைப் பொறுத்த வரையில் தமது பூகோள நலன்களைப் பேணுவதே அதற்கு முக்கியமானது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் இந்திய பூகோள நலன்களைப் பேணுவதால் எப்படியாவது இந்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதென இந்தியா கங்கணங்கட்டியது. இந்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதென்றால் ஜெயவர்த்தனவைப் பாதுகாக்க வேண்டும். ஜெயவர்த்தன சொல்வதற்கெல்லாம் தலையசைக்க வேண்டும். ஆகவே இந்த ஒப்பந்தமானது இந்திய அரசை ஜெயவர்த்தனவின் ஆதிக்கத்தினுள் தள்ளியிருக்கின்றது. ஜெயவர்த்தனவின் நலன்களைப் பேணுவதிலும், சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதிலும் இந்தியா அதிக அக்கறை காட்டுகின்றது. இந்த ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டினால் ஈழத்தமிழ் மக்களின் நலன்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. ஆனால் அது பற்றி இந்தியா அக்கறை கொள்ளவில்லை. இந்த நிலைப்பாடு காரணமாகத் தான் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஒரு யுத்தத்தைத் தொடுக்கத் துணிந்தது. ஈழத்தமிழ் மக்களின் நலன்களிலும், தமது இலட்சியத்திலும் அசையாத உறுதி கொண்ட விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிவிட்டால் தாம் நினைத்தவாறு ஜெயவர்த்தனவோடு சேர்ந்து காரியங்களைச் சாதிக்கலாமென இந்தியா எண்ணியது. புலிகளை அழித்து விட்டு தமிழ்த் துரோகிகளையும், தலையாட்டிப் பொம்மைகளான கூட்டணித் தலைவர்களையும் ஆட்சிப் பீடத்திற்கு கொண்டு வரலாமென இந்தியா திட்டமிட்டது. இந்தச் சதித்திட்டத்துடன் புலிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவெடுத்தது. எமது அன்பார்ந்த தமிழீழ மக்களே! இந்திய அரசானது எதை எதிர்பார்த்து இந்த யுத்தத்தை எம்மீது தொடுத்ததோ அது நடைபெறவில்லை. ஒரு உலக வல்லரசுக்கான சக்தி வாய்ந்த ராணுவத்தை எதிர்கொள்ளத் திராணியற்று நாம் ஆயுதங்களைக் கையளித்து சரணடைவோமென இந்தியா எதிர்பார்த்தது. ஆனால் நாம் அப்படிச் செய்யவில்லை. ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு அடிமைகளாகச் சாவதைவிட உண்மைக்கும், தருமத்திற்குமாகப் போராடி இறப்பதே மேன்மையானதென எமது தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். இந்த இலட்சிய உறுதியில் நாம் ஆயுதங்களையேந்தி இந்திய ராணுவத்துடன் மோதத் திடசங்கற்பம் பூண்டோம். யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றி எம்மைப் பூண்டோடு அழிக்க முற்பட்ட இந்திய ராணுவத்தினரை எமது வீரமறவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்கொண்டனர். பல போர் முனைகளில் மகத்தான சாதனைகள் படைக்கப்பட்டன. எமது வீராவேசத் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் இந்தியச் சிப்பாய்கள் புறமுதுகிட்டு ஓடினர். ஒரு வல்லரசை எதிர்கொண்டு போராடும் எமது உறுப்பினர்களின் உறுதியைக் கண்டு முழு உலகமே வியப்படைந்து நிற்கின்றது. கடந்த பத்து நாட்களாக கடும் யுத்தம் நடைபெற்று வருகின்றது. யாழ் நகரைக் கைப்பற்றும் இந்திய ராணுவத்தின் பிரதான நோக்கத்தை நாம் முறியடித்துள்ளோம். இந்திய ராணுவம் கனரக ஆயுதங்களைப் பிரயோகித்தும் மோட்டார்கள், பீரங்கிகள் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் பிரயோகித்தும் கண்மூடித்தனமான செல் தாக்குதல்களை நடாத்தியும் வருவதுடன் ஹெலிகொப்டர்களும், விமானங்களும் பாவிக்கப்பட்டு குடிமனைகள் மீது குண்டுமாரிப் பொழியப்பட்டன. போதாக்குறைக்கு இலங்கை விமானப்படையும்